# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 324/2023**

**Deposition of Witness for PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **சிவமணி** | Caste | : | |
| Father/Husband Name | : | **துரைசாமி தேவர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 20.04.2026**

**முதல்விசாரணை**

நான் நாட்டாப்பட்டியில் வசித்து வருகிறேன். எனக்கும் 1வது எதிரிக்கும் நில தகராறு இருந்தது. நான் எங்கள் இடத்தில் களம் கட்டி கொண்டிருந்தேன். 1வது எதிரி களம் கட்டக்கூடாது என்று சென்னார். அதற்கு நான் நீயும் இடத்தில் உழக்கூடாது என்று சொன்னேன். ஆனால் கடந்த 17.08.2022ம் தேதி 1வது எதிரி செல்வம் இடத்தில் உழுதுகொண்டிருந்தார். தனது மனைவி முதலில் சென்று கேட்டார் பின்னர் நானும் எனது மகளும் சென்று கேட்டோம். அப்போது 1வது எதிரியும் அவரது மனைவி சாந்தி, அவரது மகள் சுவர்ணா , மகன் பரத்ராஜ் ஆகியோர் எங்களை கம்பால் தலையில் அடித்தார்கள். எனது மகளுக்கு காலில் காயம் ஏற்பட்டது. எனக்கும் எனது மனைவிக்கம் தலையில் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் சண்டையை விலகிவிட்டார்கள். பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும புகார்

மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நாங்கள் மூவரும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை** :

எனக்கு எழுதப் படிக்க ஓரளவிற்கு தெரியும். நான் புகாரை படித்துபார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனது மைத்துனர் புகாரை கைப்பட எழுதி அதை வாலாந்துாரில் தட்டச்சு செய்து அதில் நான் கையெழுத்து போட்டேன். புகாரில் கடந்த 2010 ம் ஆண்டு உசிலம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் எனது தம்பி, எனது தாயார் ஆகியோர் பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்துக்கொண்டும் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மில்லுக்கு கிழக்கே செல்வம் இடம் உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்து பேசிக்கொண்டிருந்த போது எதிரிகள் தாக்கியதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மாலை 5 முதல் 6 வரை சம்பவம் நடந்தது. சம்பவம் நடக்கும் போது வெளி நபர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நாங்களும் 1வது எதிரியின் இடத்தில் அத்துமீறி நுழைந்து எதிரிகளை தாக்கியதாக எங்கள் மீதும் சிசி எண்.325/2023 வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்ற போது எதிரிகள் அங்கு வந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை. எதிரிகள் மருத்துவமனையில் காயத்துடன் வந்த சேர்ந்ததை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் கொடுத்த புகாரில் எதிரிகளுக்கும் ஏற்பட்ட காயம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் காயத்துடன்

வந்து வாலாந்துாரில் புகார் கொடுத்துவிட்டு அதன்பின்பு மருத்துவமனைக்கு வரவில்லை என்றால சரியல்ல. எதிரிகளை அவர்கள் இடத்திற்கு சென்று தாக்கிவிட்டு ஊர் பொது ஆட்கள் விலகிவிட வரும் போது நாங்கள் ஓடி வரும் போது கீழே விழுந்த காயத்தை வைத்துக்கொண்டு காவல் நிலையம் செல்லாமல் நேரடியாக மருத்துவமனையில் சென்று எங்களுக்கு தெரிந்தவர்களுடைய செல்வாக்கை பயன்படுத்தி நடக்காத சம்பவத்திற்கு எதிரிகள் தாக்கியதாக பின்னிட்டு பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.நாங்கள் தான் எதிரிகளை தாக்கினோம் என்றும் ஊரில் நானும் எதிரிகளும் சகோதரர்கள் என்பதால் ஊரில் சமரசம் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சொல்லி கொண்டிருக்கும் போது எதிரி தனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுததி புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து நாங்களாக விழுந்த காயத்தை பயன்படுத்தி மருத்துவமனை சென்று அங்கிருந்து காவல்நிலையத்திற்கு தகவல் அனுப்பி மருத்துவமனையில் பொய்யான புகாரை அங்கிருந்து தட்டச்சு மூலம் தயார் செய்து பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன முறையில் சொன்ன நேரத்தில் எதிரிகள் யாரும் என்னையோ எனது மனைவியையோ எனது மகளையோ தாக்கவில்லை என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN — Digitally signed by SATHIA NARAYANAN Date: 2026.04.28 12:50:45 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 324/2023**

**Deposition of Witness for PW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **செல்வி** | Caste | : | |
| Father/Husband Name | : | **சிவமணி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 20.04.2026**

**முதல்விசாரணை**

நான் நாட்டாப்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். எங்களுக்கும் 1வது எதிரிக்கும் நில தகராறு இருந்தது. நானும் எதிரிகளும் 16 வருடங்களாக பேசமாட்டோம். நாங்கள் எங்கள் இடத்தில் களம் கட்டி கொண்டிருந்தேன். 1வது எதிரி களம் கட்டக்கூடாது என்று சொன்னார். பின்னர் இதுசம்பந்தமாக பஞ்சாயத்து செய்தோம். இருவரும் நிலத்தில் எதுவும் செய்யாதீங்கள் என்றுசொன்னார்கள். ஆனால் கடந்த 17.08.2022ம் தேதி மாலை 5.00 மணியளவில் 1வது எதிரி செல்வம் மேற்படி இடத்தில் உழுதுகொண்டிருந்தார். நாங்கள் சென்று மறித்தோம். அப்போது 1வது எதிரி என் மீது டிராக்டர் வைத்து இடித்தார். எனது கணவர் அ.சா.1 என்னை இழுத்து காப்பாற்றினார். நானும் எனது கணவரும் இருந்தோம். எனது மகள் வீட்டில் இருந்தார். சத்தம் கேட்டு எனது மகள் சிந்தியா கையில்

குழந்தையுடன் வந்தார். முதலில் எனது மகளை 1வது எதிரியும் அவரது மனைவி சாந்தி, அவரது மகள் சுவர்ணா , மகன் பரத்ராஜ் ஆகியோர் கம்பால் தலையில் அடித்தார்கள். அதை தடுக்க சென்ற என்னையும் எனது கணவரையும் எதிரிகள் தலையில் கம்பால் அடித்தார்கள். நான் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன். எனக்கு உடல் முழுவதும் இரத்தக்கட்டு காயம் ஏற்பட்டிருந்தது. எனது மகளுக்கு முதுகில் அடி விழுந்து உடல் முழுவதும் இரத்தக்கட்டு காயம் இருந்தது. புகாரை எனது கணவர் கொடுத்தார். பின்னர் நாங்கள் மூவரும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக ஒருவாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

பஞ்சாயத்தில் நாங்கள் களம் கட்டக்கூடாது என்றும் எதிரிகள் உழக்கூடாது என்றும் பேசி முடிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். எதிரி நிலத்தை உழுது கொண்டிருந்த போது தான் நாங்கள் அங்கு சென்று தடுத்தோம் என்றால் சரிதான். சண்டை 5–5.30 மணி வரை சம்பவம் நடந்தது. எனது வீட்டிற்கு பின்பு தான் எதிரிகள் தோட்டம் உள்ளது கிழக்கு பக்கம் உள்ளது. எனது மகள் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தார். போலீஸ் விசாரணையில் எதிரிகள் எனது மகளை தான் முதலில் தாக்கினார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து தான் நான் கண் விழித்தேன். மூன்றாவது நாள் எனக்கு சுயநினைவு வந்தது. எனது கணவரிடம் புகார் எங்கு வாங்கினார்கள் என்றால் காவல்நிலையத்தில் வாங்கியதாக எனது கணவர் சொன்னார். எதிரிகளும் மருத்துவமனைக்கு வந்திருந்தார்கள். சம்பவம் நடந்து மூன்று

நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். எதிரிகள் யாரும் நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எனது மகளையோ என்னையோ தாக்கல்வில்லை என்றும், நாங்கள் தான் எதிரிகள் அவர்கள் நிலத்தில் உழவடை செய்து கொண்டிருக்கும் போது அவர்களை அடித்து தாக்கினோம் என்றும் தகராறு சத்தம் கேட்டு ஊரில் பொதுவானவர்கள் வந்து சத்தம் போட்டு விலகிவிடவே நாங்கள் அங்கிருந்து எங்கள் வீட்டிற்கு பதட்டத்தில் ஓடி வரும் போதும் கீழே விழுந்ததில் எங்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்பித்துக் கொள்ளுவதற்காக எனது கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.28 12:50:51 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 324/2023**

**Deposition of Witness for PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **பாண்டி** | Caste | : | |
| Father/Husband Name | : | **அழகன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 20.04.2026**

**முதல்விசாரணை**

நான் நாட்டாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1ன்னை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு சம்பவ இடத்திற்கு அருகில் நான் ஆடு மேய்த்துகொண்டிருந்தேன். 1வது எதிரி டிராக்டர் ஓட்டி கொண்டிருந்தார் அப்போது புகார்தாரரரின் மனைவி அதை மறித்தார். அதனால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. நான் சண்டையை விலக சென்ற போது எனக்கு தலையில் அடிப்பட்டது. என்னை யார் அடித்தார்கள் என்றுதெரியாது. அதன்பிறகு என்ன நடந்தது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழுங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 17.08.2022ம் தேதி மாலை 5.30 மணிக்கு நாட்டாப்பட்டியில் உள்ள அ.சா.1 ன் ரைஸ்மில் அருகே உள்ள நிலத்தில்

அ.சா.1, மற்றும் அ.சா.2 மற்றும் அவரது மகள் நின்றுகொண்டிருந்த போது நான் ஆடு மேய்த்துகொண்டிருந்தேன் என்றும், அப்போது எதிரிகள் அனைவரும் கையில் கம்புடன் வந்து அ.சா.1ன்னை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார் என்றும், சாட்சி செல்வி கையை பிடித்துஇழுத்து கீழே தள்ளிவிட்டு தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் அதனை தடுத்த அ.சா.1 ன்னை எதிரிகள் அனைவரும் சேர்ந்து கம்பால் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அதை சாட்சி சிந்தியா வீடியோ எடுத்த போது 1வது எதிரி கம்பால் அவரை அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், அப்போது நான் மற்றும் இதர சாட்சிகள் சண்டையை விலகிவிட்ட போது எதிரிகள் கொலை மிரட்டல விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.28 12:50:56 +0530

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 324/2023**

**Deposition of Witness for PW4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **கோபி** | Caste | : | |
| Father/Husband Name | : | **பெரியகருப்பத்தேவர்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**( All Accused present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 20.04.2026**

**முதல்விசாரணை**

நான் வாலாந்துாரில் வசித்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு நான் சடச்சிபட்டிக்கு சென்று விட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் நபர் காயம்பட்டு கீழே கிடந்தார். அவருடைய பெயர் ஞாபகமில்லை. அவரை காரில் ஏற்றி அனுப்பிவிட்டேன். அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 17.08.2022ம் தேதி மாலை 5.30 மணிக்கு நாட்டாப்பட்டியில் உள்ள அ.சா.1 ன் ரைஸ்மில் அருகே உள்ள நிலத்தில் அ.சா.1, மற்றும் அ.சா.2 மற்றும் அவரது மகள் நின்றுகொண்டிருந்த போது நான் அங்கு

நின்றுகொண்டிருந்தேன் என்றும், அப்போது எதிரிகள் அனைவரும் கையில் கம்புடன் வந்து அ.சா.1ன்னை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார் என்றும், சாட்சி செல்வி கையை பிடித்துஇழுத்து கீழே தள்ளிவிட்டு தலையில் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும் அதனை தடுத்த அ.சா.1 ன்னை எதிரிகள் அனைவரும் சேர்ந்து கம்பால் அடித்து இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அதை சாட்சி சிந்தியா வீடியோ எடுத்த போது 1வது எதிரி கம்பால் அவரை அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றும், அப்போது நான் மற்றும் இதர சாட்சிகள் சண்டையை விலகிவிட்ட போது எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்றதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.28 12:51:02 +0530